**அசல்வழக்கு எண். OS. 698 /2021– PW1 .**

**திருமதி .எல்லம்மா க/பெ.**

**நாள்:17.10.2023**

**குறுக்கு விசாரணை :**

சத்தியமாகச் சொல்கிறேன். நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு 38 வயது. எனது பெற்றோர் ஊர் செம்படமுத்தூர், அது கிருஷ்ணகிரிக்கு அருகில் உள்ளது. இந்த வழக்கை நான், எனது கணவர், மற்றும் மாமனார் தாக்கல் செய்துள்ளோம். 66 சென்ட் நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளோம். அந்த 66 சென்ட் நிலத்தை எனது மாமனாருக்கு அப்பா என் கணவருக்கு தானமாக எழுதி கொடுத்துள்ளார். எனது கணவர் அந்த சொத்தை எனது பெயரில் கிரயம் எழுதி கொடுத்துள்ளார். எனது மாமனாரின அப்பா பெயர் திம்மராயன். ச.எண்.436/1 ல் எனது மாமனாரின் அப்பாவிற்கு அது எனக்கு தெரியாது. தற்போது சாட்சி ஞாபகம் இல்லை என்று சொல்கிறார். எனது மாமனாரின அப்பா திம்மராயனுக்கு அந்த நிலம் அவரது அப்பா கொடுத்தது தான். எனது பெயரில் கிரயம் ஏற்பட்டுள்ள 66 சென்ட் நிலத்தை பொறுத்து எனக்கு தனிப்பட்டா வாங்கப்பட்டுள்ளதா என்றால் வந்துள்ளது. தனிப்பட்டாவின் சர்வே எண்.436 தான். ச.எண்.436/1 என்பது தற்போது வரை உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் ஆமாம். எனக்கு 2001 ல் திருமணம் நடைபெற்றது. 2001 க்கு முன்பு எனது மாமனார் குடும்பத்தில் சொத்து சம்மந்தமாக என்ன ஏற்பபாடுகள் நடைபெற்றறு ஆவணங்கள் எழுதப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 02.05.1991 ல் எழுதப்பட்டதாக சொல்லப்படும் பதிவு செய்யப்படாத கிரயபத்திரம் பற்றி எனக்கு தெரியாது சொன்னார்கள். அந்த பதிவு செய்யப்படாத பத்திரத்தை நான் நீதிமனற்த்தில் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகி 21 வருடம் ஆகிறது. 21 வருடத்திற்கு முன்பு தாவா சொத்தில் வீடு இருந்ததா என்று எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் ஆன போது ஓட்டு வீடு இருந்தது. 1991 ல் எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் 5 சென்ட் நிலம் 66 சென்ட் நிலத்தில் தான் உள்ளது. வா.சா.ஆ.17 ல் கூரை வீடு இருப்பதாக விவரம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ல் உள்ள சொத்தின் சர்வே எண். குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ஐ யார் எழுதினார்கள் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். நான் வருவதற்கு முன்பே அந்த ஆவணம் எழுதப்பட்டு விட்டது. நான் வழக்கு தாக்கல் செய்யும் போது 71 சென்ட் நிலததற்கு வழக்கு தாக்கல் செய்துவிட்டு தற்போது வா.சா.ஆ.17 ஆவணம் மோசடியானது என்பதால் தான் 66 சென்ட் நிலத்தை பொறுத்து மட்டும் உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்றுள்ள நிலத்திற்கு எந்த பக்கம் 2ம் பிரவிதாதி அலமேலின் நிலம் உள்து என்று எனக்கு ஞாபகம் இல்லை. ச.எண்.436/1 மொத்த நிலமும் தென்வடலாக

உள்ளதா அல்லது கிழமேலாக உள்ளதா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீது 2018 முதல் 2020 வரைக்குள்ளானது என்றால் சரிதான். தாவா சொத்தில் கூரை வீடு எப்போதும் இருந்து இல்லை என்றும் அவ்வாறு இருந்து இருந்தால் அதற்கான ரசீதுகளை தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரியல்ல. அலமேலு நிலத்தை நான் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி விட்டதாக போலிசில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது தொடர்பாக என்னை போலிசார் அழைத்து விசார்த்தார்கள். தற்போது சாட்சி வீடு கட்டியதாக புகார் கொடுக்கவில்லை என்றும் நிலம் அவர்களுக்கு இருக்கிறது என்று தான் புகார் கொடுத்ததாக சொல்கிறார். நான் கிரயம் பெற்ற 6 சென்ட் நிலத்தில் தான் நான் தார்ஷ் விடு கட்டி உள்ளேன் என்பதை நிருபனம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி நான் மனு தாக்கல் செய்யவில்லை. தற்போது நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தை அளவீடு செய்வதில் ஆட்சேபணை உள்ளதா என்றால் பிரதிவாதிகள் நிலத்தை அளப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. எனது நிலத்தை அளந்தால் எனது தார்ஷ் வீடு நான் கிரய்ம வாங்கியதாக சொல்லும் 66 சென்ட் நிலத்தில் இல்லை என்பதும் பிரதிவாதிகள் நில்த்தில் தான் உள்ளது என்பதும் தெரிந்துவிடும் என்பதற்காக பிரதிவாதிகள் நிலத்தை அளப்பதில் ஆட்சேபணை இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் முன்பு 2 ம் பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்புக்கு நான் பதில் அனுப்பி உள்ளேன். பதில் அறிவிப்பிலும் 5 சென்ட் நிலமும் 66 சென்ட் நிலத்திற்குள் வருகிறது என்று சொல்லி தான் பதில் அனுப்பி உள்ளேன். வழக்கு 71 சென்ட் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளளேன் என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஓம்./—எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**